BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# இந்த வருட குளிர்காலத்தில் சாலைகளில் பொழிந்த பனியை அகற்ற ப்ராம்ப்ட்டன் நகரம் தயாராக இருக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (நவம்பர் 15, 2021) – குளிர்கால பனிப்பொழிவு வந்துவிட்டது; மற்றும் ப்ராம்ப்ட்டன் நகரப் பணிப்படையும் தயாராக இருக்கின்றனர்! நகரத்திற்கு சொந்தமான சாலைகளில், பக்கவாட்டு நடைபாதைகள், பள்ளிகள் இருக்கும் குறுக்கு சாலை சந்திப்புக்கள் மற்றும் பொழுதுபோக்கிற்கான நடைபாதைகளில் பனியினால் ஏற்படும் தடைகளை அகற்ற நாங்கள் தயாராகவே இருக்கிறோம் என்பதை உறுதிப்படுத்த எங்கள் பணியாளர்கள் 24 மணி நேரமும் பணியாற்றுகின்றனர்; இதனால், குடியிருப்புவாசிகள் தாங்கள் செல்லுமிடங்களுக்கு பாதுகாப்புடன் செல்ல முடியும்.

குளிர்காலத்திற்கு ஏற்றபடி தயாராக இருத்தல் என்பதற்கு, ஒருவருக்கு ஒருவரின் உதவியுடன் ஒரு அணியாக இருந்தபடி செயல்படுவது என்று அர்த்தமாகும்; இதை நகர நிர்வாகம் குடியிருப்புவாசிகளுக்கு நினைவுபடுத்துகிறது; இதனால் இந்தக் குளிர்காலத்தில் அனைவரும் பாதுகாப்புடன் இருக்க முடியும்:

- ஒரு அவசர நிலை எனும் நிகழ்வில் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் 72 மணி நேரத்திற்கு பராமரித்துக்கொள்ளும் வகையில் தயாராக இருக்கவும். உங்கள் வீடு மற்றும் வாகனத்திற்கான 72-மணி நேர பாதுகாப்பு சாதனத் தொகுப்பினை தயார் செய்து வைத்துக்கொள்ளவும்.
- பனிப்பொழிவுக்குப் பின்னர் பக்க வாட்டு நடைபாதைகளில் கிடக்கும் பனிக்கட்டி, பனித்துகள் மற்றும் சகதியை அகற்றி வைக்கவும்;
- தெருக்களில் வாகனங்களை நிறுத்தி வைக்க அனுமதியில்லை மற்றும் குளிர்கால சிறப்புப்பணிகளின்போதும் இது அமல் செய்யப்படும். பனி அகற்றுவதற்கான பணிகளின்போது வாகனங்களை நகர்த்திக் கொடுத்து விடவும், இதனால் அவசர ஊர்திகள் தடையில்லாமல் செல்ல முடியும்;
- பனிப்பொழிவு முடிந்துபோய் 24 மணி நேரம் ஆகியிருந்து, அப்போதும்கூட உங்கள் தெருக்களில் தனிக்கவனம் செலுத்த வேண்டியிருந்தால் 311 ஐ அழைக்கவும் அல்லது, 311@brampton.ca,என்ற மின்னஞ்சல் மூலம் அல்லது www.311brampton.ca என்ற வலைத்தளத்திற்கு வருகை தருவதன் மூலம் அல்லது 311 மொபைல் செயலியை உபயோகிப்பதன் மூலம் தொடர்பு கொள்ளவும்;
- தகுதிவாய்ந்த மூத்தகுடிமக்களுக்கு மற்றும் உடல்ரீதியான இயலாமை கொண்டிருக்கும் வீட்டு உரிமையாளர்களுக்கு பனியை அகற்றுவதற்கான நிதியுதவி கிடைக்கப்பெறுகிறது; இது பற்றி இங்கு அறியவும் : ow.ly/D2R050xgPq2.

**நகரின் பனித்துகள் அகற்றுவது பற்றிய தடம் அறிதல்**

2019 ஆம் ஆண்டில், உள்ளூர் சாலைகளில் திரளும் பனித்துகள் அகற்றும் பணியானது, திரண்ட பனித்துகளின் உயரம் 7.5 செ.மீ ஆகும் வரை காத்திருக்காமல் 5 செ.மீ அளவாக இருக்கும்போதே சேவை அளிக்க ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் ஒப்புதல் வழங்கியது. அதாவது பனிப்பொழிவு நிகழ்ந்தவுடனேயே வேலையாட்கள் உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டனர் என அர்த்தமாகிறது.

எந்தெந்த சாலைகள் மற்றும் பக்கவாட்டு நடைபாதைகளில் பனி அகற்றப்பட்டது என்பதை அறிய, குடியிருப்பு வாசிகள் www.brampton.ca/snow, எனும் வலைத்தளத்தில், நகரத்தில் பனி அகற்றுவது பற்றிய தடம் அறிதல் (Plow Tracker) பகுதியில் காணலாம்; மற்றும் 311 மொபைல்செயலிலும் காணலாம்! இந்த செயலியை கூகிள் ப்ளே அல்லது ஆப் ஸ்டோரில் இருந்து பதிவிறக்கிக் கொள்ளலாம். இந்த செயலியை உபயோகித்து பனி அகற்றும் பராமரிப்புப் பணியின் முன்னேற்றம், எந்தெந்த சாலைகளுக்கு முன்னுரிமை என்பது பற்றி அறியலாம்: மற்றும் பனி அகற்றும் இயந்திரம் அருகாமையில் இருக்கிறதா என அறிய வந்தால் தங்கள் வாகனங்களை அப்புறப்படுத்தி வைக்கலாம். சேவைகளுக்கான வேண்டுகோளையும் சமர்ப்பிக்கலாம்.

குளிர்கால இயக்க செயல்பாடுகள் பற்றிய மேலும் தகவல்களுக்கு வருகை தரவும்: www.brampton.ca/snow.

**அறிஞர் கூற்றுக்கள்**

“நமது குடியிருப்புவாசிகளின் பாதுகாப்புதான் நமக்கு முன்னுரிமை கொண்ட விஷயமாகும் – அதனால்தான், குளிர்காலம் வந்தவுடனேயே நமது நகராட்சி சிறப்பு பணியாளர்கள் தாங்கள் தயாராக இருப்பதை தெரிவிக்க இருபத்து நான்கு மணி நேரமும் பணியாற்றி வருகிறார்கள். இந்தக் குளிர்ப்பருவத்தை பாதுகாப்பானதாகவும் ரசித்து அனுபவிக்கத் தக்கதகாவும் ஆக்குவதில் நம் அனைவரின் பங்காற்றலும் இருக்கிறது. உங்கள் வீட்டின் பக்கவாட்டு நடைபாதைகளை பனிக் கட்டி, பனித்துகள் மற்றும் சகதியில்லாமல் வைத்திருங்கள்; குளிர்கால இந்த நிகழ்வுகளின்போது உங்கள் வாகனங்களை சாலையிலிருந்து அகற்றி வையுங்கள் ; உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் எங்களை அணுக 311 மொபைல் செயலியை உபயோகியுங்கள்.”

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

”நமது நகரத்தில் எங்களின் மிகப்பெரிய நடவடிக்கைகளில் ஒன்று குளிர்கால நிலைமைகளுக்கு செவி சாய்ப்பதேயாகும். இந்தக் குளிர்ப்பருவத்தினை எங்கள் குடியிருப்பாளர்களுக்கு பாதுகாப்பானதாகவும் ரசித்து மகிழத்தக்கதாகவும் மாற்றுவதற்கும், ஆண்டுதோறும் 4,053 கிலோமீட்டர் நீள சாலை தடங்கள், 1,007 கிலோமீட்டர் பக்கவாட்டு நடைபாதைகள்/நடைபாதைகள் மற்றும் 211 பொழுதுபோக்கு பாதைகளை பராமரிப்பதற்கும் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். நமது சமூகத்தை குளிர்காலத்திற்கு

தக்கபடி தயாராக வைத்திருக்க ஒவ்வொருவரும் தங்கள் பங்கைச் செய்தால், நாம் அனைவரும் நாம் செல்லவேண்டிய இடத்திற்கும் பாதுகாப்பாகச் செல்ல முடியும்."

*- பால் விசெண்ட், பிராந்திய கவுன்சிலர் வார்டுகள் 1&5; தலைவர், பொதுப்பணிகள் மற்றும் பொறியியல் துறை, ப்ராம்ப்ட்டன் நகரம்*

"குளிர்காலப் பருவம் ப்ராம்ப்ட்டனுக்கு வந்துவிட்டது, மற்றும் நகரமும் அதற்குத் தயாராகிவிட்டது. எங்கள் 311 மொபைல் செயலியைப் பதிவிறக்கி, எங்கள் #BramSnowUpdate (ப்ராம்ப்ட்டன் நகர பனி பற்றிய புதுத் தகவல்கள்) க்காக ப்ராம்ப்ட்டன் நகரின் அனைத்து சமூக ஊடகக் கணக்குகளையும் பின்தொடருங்கள்: நமது சமூகத்தை குளிர்காலத்திற்குத் தயார்படுத்த அவரவர் பங்கைச் செய்யவும் நாங்கள் குடியிருப்பாளர்களை ஊக்குவிக்கிறோம். ஒன்றாக இருந்தபடி, இந்த குளிர்ப்பருவம் முழுவதும் நமது நகரத்தை பாதுகாப்பாகவும் அணுகக்கூடியதாகவும் வைத்திருக்க முடியும்."

- பேட் ஃபோர்ட்டினி, பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் *7 & 8, துணைத்தலைவர், பொதுப்பணிகள் மற்றும் பொறியியல் துறை, ப்ராம்ப்ட்டன் நகரம்*

"நன்கு இயங்கும் ஒரு நகரமாக இருந்தபடி, எங்கள் குடியிருப்பாளர்களுக்கான தினசரி இயக்கசெயல்பாடுகள் மற்றும் சேவைகளை தொடர்ந்து மேம்படுத்துவதற்கு நாங்கள் அர்ப்பணிப்பு கொண்டுள்ளோம். இந்தக் குளிர்ப் பருவத்தில் உள்ளூர் பனி அகற்றும் செயல்பாடுகளின் நிலையைப் பற்றித் தெரிந்துகொள்ள, Plow Tracker (ப்ளோ ட்ராக்கர்) உள்ளிட்ட 311 மொபைல் செயலியை குடியிருப்பாளர்கள் பதிவிறக்கம் செய்யலாம், இதனால் அவர்கள் பனிப்பொழிவு நிகழ்வுகளின் போது பாதுகாப்பான முறையில் தங்கள் பயணங்களைத் திட்டமிடலாம்.

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca *இல்* இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்

BRAMPTON

# Media Release

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca